

வலயக்கல்வி காரியாலயம் நுவரெலியா

கோட்டம் III

நிகழ் நிலை வகுப்பு

நு/தங்கக்கலை இல.01 தமிழ் மகா வித்தியாலயம்

திரு.T.A.பெற்றிக் குறே

தரம் ~ 11 சித்திரக்கலை

7.2.2 பொலநறுவைகால சிலைகள்

www.ikeu

• கல் விகாரை

- பொலநறுவையில் முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டது.
- கி.பி 12ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.
- இவ்விகாரையை உத்தரராமய விகாரை எனவும்
- இலங்கையில் ஒரே கருங்கற் பாறையில் மூன்று நிலைகளில் நான்கு புத்த சிலைகள் செதுக்கப்பட்டுள்ளது.



- ஆடைகள் சமாந்தரமாக இடப்பட்ட இரட்டைக்கோடுகளாலும் அமைக்கப்பட்டிருத்தல்
- அரைவாசி மூடிய கண்களும், நீண்ட காதுகளும், சுருள் வடிவம் கொண்ட உச்சிக்குடிம்பியுடன் தலைமுடி காணப்படுதல்.


www.dut.lk

பொலநறுவைக் காலத்து சிலைகள்
























அமர்ந்த நிலையிலிருக்கும் சமாதி புத்தர் சிலை 01



- இச்சிலை அமர்ந்திருக்கும் ஆசனத்தில் வஜ்ஜிர குறியீடு, சிங்க உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாசனம் வஜ்ஜிராசனம் எனப்படுகிறது.
- சிலையில் முகம் சாந்தமாகவும் கண்கள் அரை திறந்தவாறும், கைகள் தியான முத்திரையுடனும், கால்கல் வீராசனமுறையுடனும் கானப்படுகின்றது. காவியுடை சுருக்கங்கள் சோடிக்கோடுகளால் காட்டப்பட்டுள்ளது.



- நீண்ட காது, சுருள் முடியுடன் உச்சிக்குடுமி உள்ளது.
- பல்லவ பாணியின் அம்சங்களைக் கொண்டுள்ளது. சிலைக்கு பின்னால் தாமரைப்பூ அலங்காரம், ஒளிச்சுடர், மகரதோரண அமைப்பு காணப்படுகின்றது.
- மகாயான பௌத்தத்தின் செல்வாக்கை காட்டுகிறது.

www.ikeduk

• அமர்ந்திருக்கும் புத்தசிலை 11

- இச்சிலை வித்தியாதார குகைக்குள் அமைக்கப்பட்டுள்ளது இச்சிலை அமர்ந்திருக்கும் ஆசனத்தில் வஜ்ஜிர குறியீடு, சிங்க உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாசனம் வஜ்ஜிராசனம் எனப்படுகிறது.
- சிலையில் முகம் சாந்தமாகவும் கண்கள் அரைதிறந்தவாறும், கைகள் தியான முத்திரையுடனும், கால்கல் வீராசன முறையுடனும் காணப்படுகின்றது.
- காவியுடை சுருக்கங்கள் சோடிக்கோடுகளால் காட்டப்பட்டுள்ளது.
- உயர் புடைப்பு நுட்ப முறையுடன் நிர்மாணிக்கப்பட்ட சிலை 4 அடி 7 அங்குலம் உயரமுடையது.
- நுணுக்கமாகப் பொளியப்பட்டுள்ள சிலையின் ஒரு பக்கத்தை மாத்திரம் மறைக்கும் காவியுடை, இரட்டைக் கோடுகளால் காட்டப்பட்டுள்ளது.
- நீண்ட காதுகள், சுருள் முடி மீது உச்சிக்குடுமி காட்டப்பட்டுள்ளது.
- பல்லவ பாணியின் அம்சங்களைக் கொண்டுள்ளது. சிலைக்கு பின்னால் தோரண அலங்காரம், தேவ உருவங்களும், அலங்கார குடையும் காணப்படுகின்றது.



www.lkedu.lk

நின்ற நிலை புத்தசிலை




- தாமரை பீடத்தின் (பத்மாசனம்) மேல் அமைக்கப்பட்டுள்ளது. நெஞ்சிற்கு குறுக்காக கைகளைக் கட்டி திரிபங்க நிலை கருங்கற்பாறையில் முழப்புடைப்பு சிலையாக செதுக்கப்பட்டுள்ளது.
- சிலையின் கைகள் **பரதுக்க துக்கித** முத்திரையை காட்டுகிறது. காவியுடை சுருக்கங்கள் சோடிக்கோடுகளால் காட்டப்பட்டுள்ளது.
- பல்லவ பாணியின் அம்சங்களைக் கொண்டுள்ளது. சோகத்தையும் கருணையையும் வெளிப்படுத்தும் முகபாவனை இச்சிலையில் காட்டப்பட்டுள்ளது.
- புத்தரின் சீடர் ஆனந்தர் என பல விமர்சனங்கள் காணப்படுகிறது. புத்தபெருமானின் பரிநிர்வாணத்தை (இறப்பை) இட்டு வேதனைப்படும் இது ஆனந்ததேரரின் சிலை எனக் கருதப்படுகிறது.
- இச்சிலையில் காணப்படும் முத்திரை பற்றி வேறு கருத்தும் நிலவுகின்றது.
- நீளமான காதுகள், குடுமி, சற்று சுருண்ட முடி, தாமரை மீது வீற்றிருத்தல் ஆகியவற்றைக் கருதி இச்சிலை புத்தர் சிலை எனக் கருதப்படுகிறது. ஏனெனில் தெய்வீக வடிவங்கள் மாத்திரமே தாமரை மலர் மீது காட்டப்படும்.

www.ikeda.lk

துயில் நிலை புத்தசிலை



- துயில் நிலை புத்தவடிவம் பரிநிர்வாண நிலையைக் குறிக்கின்றது. காவியுடை மடிப்புக்கள் சோடி இரேகைகளால் காட்டப்பட்டுள்ளது.
- பல்லவ பாணியின் அம்சங்களைக் கொண்டுள்ளது.
- இக்கற்சிலை முழுப்புடைப்பு அதிபுடைப்புச் சிலையாக பொழியப்பட்டுள்ளது.
- புத்தரின் தலை வைத்துள்ள கற்தலையனை பஞ்சு தலையணை போன்று மென்மையான தன்மையாக செதுக்கப்பட்டுள்ளது.
- உயர்வான கலைப்பண்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சுருட்டை முடியைக் கொண்டது.
- சமாந்தரக் கோடுகளைக் கொண்ட அலை வடிவ மடிப்புகளுடன் காவியுடை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.





www.kedu.lk

பராக்கிரமபாகு சிலை



- பொலநறுவை பராக்கிரம சமுத்திரத்திற்கு அருகே பொத்குல் விகாரைக்கு முன்பாக இச்சிலை காணப்படுகின்றது.
- கி.பி 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கம்பிரமாக ஒரு காலை ஊன்றி மறுகாலை தளர்வாக திரிபங்க நிலையில் காணப்படுகிறது.



- மனிதன் சிந்தனை வயப்பட்டிருப்பதோடு கண்கள் கையில் ஏந்தியுள்ள ஏடு போன்ற பொருள் மீது நோக்கியுள்ளார். (நுகத்தடி)
- தாடி நெஞ்சுப்பகுதி வரை நீண்டுள்ளது. மீசையின் அந்தங்கள் கீழ் நோக்கி வளைந்துள்ளன, உடலின் கீழ் பகுதியில் மடித்துக்கட்டப்பட்ட வேட்டி போன்ற உடை அணியப்பட்டுள்ளது. இடுப்பு பட்டியும் காணப்படுகிறது.



- பொத்குல் விகாரை சிலை தொடர்பான கல்விமான்களின் கருத்துகள்:

- பராக்கிரமபாகு மன்னனின் சிலை என்பது
- பொலநறுவையில் வாழ்ந்த குருளுகோமி எனும் ஞானியுடையதுஎன்பது
- கபிலர் எனும் ரிஷியுடையது என்பது
- கையில் தாங்கியுள்ள பொருள் அரசைக் குறிக்கிறது என்பது செனரத் பரணவித்தான அவர்களின் கருத்தாகும்.
- புலஸ்தி ரிஷியைக் குறிக்கிறது என்பது

www.kedu.lk


பொருட் கூட்டம் (மாதிரி படங்கள்)



www.kegu.lk










பொருட் கூட்டம் (மாதிரி படங்கள்)

- பொருட் கூட்டம் (மாதிரி படங்கள்)









நன்றி

T.A.பெற்றிக் குறே (BA,PGDE Merit)
நு/தங்கக்கலை இல.01 த.ம.வி லிந்துல்ல
நுவரெலிய கல்வி வலயம்

www.lkedu.lk